செய்தி வெளியீடு எண்: 434/2017 நாள்: 2007.2017

**மின்னாற்றல் தணிக்கை மற்றும் மின்னாற்றலை சேமிக்கும் குறு, சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் மின்னாற்றல் தணிக்கைக்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம் அரசு மாண்யம் பெற ஓர் அரிய வாய்ப்பு!**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு!!**

தமிழக அரசு குறு, சிறு (மற்றும்) நடுத்தர தொழில் நிறுவனங்களின் மின் ஆற்றல் திறன் மேம்பாட்டக்காக தொழில் நிறுவனங்களின் அதிபர்கள்இ பிரதிநிதிகளுக்கு விழிப்புணர்வு முகாம், செயல் அலுவலர்களுக்கு மின்னாற்றலை சேமிக்கும் பயிற்சிக்கான ஆயத்தக் கூட்டம் வேலூரில் ஓட்டல் டார்லிங் ரெசிடென்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பேசியதாவது:

இன்றைய காலகட்டத்தில் மின்னாற்றலை சிக்கனமாக பயன்படுத்தி மின்னாற்றல் செலவினை குறைப்பது இன்றியமையாததாகும். நம்முடைய நாட்டில் மின்னாற்றல் ஆனது புதுப்பிக்க தக்க எரிசக்தி மற்றும் புதுப்பிக்க இயலாத எரிசக்தி என இருவேறு வகைகளில் உற்பத்தி செய்யப்படுகிறது. புதுப்பிக்க தக்க எரிசக்தியின் மூலம் உற்பத்தி செய்யப்படும் சூரிய மின்சக்தி, காற்றாலை மின்சக்தி, நீர் மின்னாற்றல், மற்றும் இயற்கை எரிவாயு மின்னாற்றல் போன்றவற்றை அதிகளவு பயன்படுத்துவதன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடுவதை வெகுவாக குறைக்கலாம். அதே நேரத்தில் புதுப்பிக்க இயலாத எரிசக்தி மின்னாற்றலான நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு மின்சக்திகளை பயன்படுத்துவதனால் சுற்றுச்சூழல் மாசடைந்து புவி அதிகப்படியான வெப்பம் அடைதலும், ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்படும் அபாயமும் அதிகளவில் உள்ளது. நம்முடைய நாட்டில் உற்பத்தியாகும் மின்னாற்றலில் 56 சதவிகிதம் மின்னாற்றல் தொழில் நிறுவனங்களால் பயன்படுத்தப்படுகிறது. எனவேகுறு, சிறு (மற்றும்) நடுத்தர தொழில் நிறுவனங்கள் மின்னாற்றல் தணிக்கை செய்து அதன் பரிந்துரைகளை செயல்படுத்தி மின் நுகர்வை குறைத்து மின்னாற்றல் செலவு மற்றும் மின் கட்டணத்தை குறைக்க வேண்டும்.

மின்னாற்றல் தணிக்கை மற்றும் மின்னாற்றலை சேமிக்கும் குறு, சிறு (மற்றும்) நடுத்தர தொழில் நிறுவனங்களின் மின்னாற்றல் தணிக்கைக்கு ஆகும் செலவில் 50 சதவிகிதம் அல்லது அதிகபட்சமாக ரூ.75,000/- வரை அரசு மானியமாக நிறுவனங்களுக்கு வழங்குகிறது. மின்னாற்றல் தணிக்கை பரிந்துரையின் அடிப்படையில் தொழில் நிறுவனங்கள் மின்னாற்றலை சேமிப்பதற்கான உபகரணங்கள் அமைப்பதற்கான முதலீட்டில் 25 சதவிகித மானியம் அரசு வழங்க உள்ளதெனவும், மேற்காணும் உபகரண செலவினங்களுக்காக அதிகபட்சமாக ரூ.2,50,000/- நிதி உதவி செய்யப்படும். முதலீட்டு மின்னாற்றல் தணிக்கை மற்றும் சேமிப்பு தொடர்பான சந்தேகங்கள் மற்றும் விபரங்களுக்கு பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், வேலூர்-6 என்ற முகவரியிலோ அல்லது 0416-2242512, 0416-2242413, 98424 80424 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு விவரங்களை கேட்டுக் கொள்ளலாம் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் எரிசக்தி சிக்கன ஆராய்ச்சி நிறுவனத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர் திரு.செல்வம், கூடுதல் இயக்குநர் திரு.அஜித்குமார், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.மணிவண்ணன், முன்னோடி இந்தியன் வங்கி மேலாளர் திரு.தாமோதரன், மாவட்ட சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன தலைவர் திரு.சுவாமிநாதன், இராணிப்பேட்டை சிறு, குறு மற்றம் நடுத்தர தொழில்கள் சங்கத் தலைவர் திரு.ஆர்.அமிர்தகணேசன் மற்றும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவன பிரதிநிதிகள் கலந்துக் கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்-9.